திரு. ஏ. ஆர். பெருமாள் : தலைவர் அவர்களே, அமைதியாக இருக்கிற தமிழக மக்களுடைய உணர்ச்சிகளைத் தூண்டி விடுகின்ற முறையில் ஏற்படுத்தப்படுகின்ற இந்தத் திட்டத்தை கைவிடுமாறு மத்திய அரசை நமது அரசு கோருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய அரசுக்கு அப்படிப்பட்ட நல்ல எண்ணம் வரும் என்று என்னாலே நம்பமுடியவில்லை. ஒரு மொழியைப் பரப்புவது வேறு, ஒரு மொழியை ஒரு நாட்டிலே திணிப்பது வேறு. ஒரு மொழியை ஆட்சிமொழியாக, இந்திய தேசிய மொழியாக ஏற்றுக் கொள்வது காலப்போக்கிலே, மக்களுடைய கலாச்சாரத் தொடர்பால் ஏற்பட வேண்டும். ஆனால், மத்திய ஆட்சி அதை உணர்ந்ததாகத் தெரியவில்லை. எப்படியாவது ஹிந்தியை ஆட்சிமொழியாக இந்த நாட்டிலே வைத்துவிடலாம், அதற்கு எந்த முறையையாவது பின்பற்றலாம் என்று எண்ணுவதுபோல்தான் எனக்குத் தோன்றுகிறது.

பள்ளிகளில் வேலை நேரம்

***296 வின.—திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவிற்கு விடையளிப்பாரா—

பள்ளி வேலை நேரத்தை வரும் கல்வியாண்டிலிருந்து அதிகப்படுத்தும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

கிண்டியில் பிளாஸ்டிக் பயிற்சி நிலையம்

***297 வின.—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிண்டியில் மத்திய அரசு பிளாஸ்டிக் தொழிற்குரிய பயிற்சி நிலையம் ஒன்று அமைக்க ஏற்பாடு செய்துள்ளதா ?

(இ) ஆம், எனில் எத்தகைய பயிற்சிகள் இருக்கும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) மத்திய அரசு ப்ளாஸ்டிக் பயிற்சி நிலையம், ப்ளாஸ்டிக் பதனப் படுத்தல், தொழிற்சாலையில் வார்ப்படம், அச்சுகள் மற்ற கருவிகள் இவற்றின் அமைப்பு முறையைப்பற்றியும், உற்பத்தி செய்தலைப்பற்றியும் ஆலோசனையும், பயிற்சியும் அளிக்கும். இந்த நிலையம் ப்ளாஸ்டிக் பொருள்களை உற்பத்தி செய்வதில் நவீன தொழில் நுட்பங்களைப் பயன் படுத்துவதற்கு வணிக நிறுவனங்களுக்கு உதவி செய்யும்.

2 நடைமுறைக் கேள்விகள்.

(அ) ஒரு வினவிற்கு விடையளித்த பின்னர் துணை வினவே அனு மதிக்கப்படாத முந்தைய வினவிற்குத் துணை வினக் கேட்க அனுமதி.

THIRU T. MARTIN : With your permission, Sir, I will put a supplementary to the earlier question.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது முடியாது, அந்தக் கேள்வியைத் தாண்டிவிட்ட பிறகு கேட்க முடியாது.

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயின்ட் ஆப் ஆர்டர். கேள்வி 296-க்கு ஒரு சப்ளிமெண்டரிகூட போடவில்லை. விதிகளிலே என்ன சொல்கிறது என்றால், அதாவது ரூல் 38 (2)-ல்

The Speaker may disallow any supplementary question if in his opinion, it infringes the rules regarding questions or if a sufficient or reasonable number of supplementary questions has already been put in respect of the same question.

My point is, discretion is given to the Hon. Speaker only under Rule 38(1). Under Rule 38 (2), there is no discretion given for the Hon. Speaker. If sufficient or reasonable number of questions have been already put in respect of the same question. the Hon. Speaker may disallow any supplementary question, But here, for this particular question, no supplementary question has been permitted to be put. So I request the Hon. Speaker to allow Members to put supplementary questions for that question.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்வி கேட்கும் நேரத்திலே உறுப்பினர்கள் பேரவைத் தலைவருடைய கவனத்தை ஈர்க்க வேண்டும். நான் ஏற்கனவே பார்த்தேன், யாரும் என்னுடைய கண்களிலே படவில்லை. என்னுடைய கண்ணிலே பட்டிருந்தால் நிச்சயமாக வாய்ப்பு கொடுத்திருப்பேன். ஆகவே, இந்த விஷயத்தில் எந்தவிதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை. (குறுக்கீடு) நான் பார்த்தேன். உங்களுக்குப் பின்னாலே அவர் இருக்கிறார். ஆக, அவர் கை தூக்கினாரா, இல்லையா என்று, உங்களுக்குத் தெரிந்ததை . . . .

Thiru K. VINAYAKAM : On a point of order, Sir. The Speaker is very clear in his remarks that one should be in a position 9-30 to attract or catch the eye of the Speaker. But your eye is such an elusive one that it is not so easy to catch it. Will you permit us to catch your ear ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் சட்டமன்றத்தில் பல ஆண்டுகளாக இருந்தவர். அவர்கள் கேட்கின்ற உரிமை நியாயம்தானா ? எல்லோரும் "ஸ்பீக்கர்" "ஸ்பீக்கர்" என்று சொல்லிக் கொண்டிருந்தால், இந்தச் சபை எப்படி நடைபெறும் ? அது நல்ல மரபுதானா ? ஒரு மரபை உருவாக்க வேண்டுமென்றால், அது நல்ல மரபுதானா என்பதை நினைத்துப் பார்த்துக் கேட்க வேண்டும். என்னுடைய கண் அப்படி ஒன்றும் குருடான கண் அல்ல.

Thiru K. VINAYAKAM : I only said that your eye is elusive.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய கண் நல்ல பார்வையோடுதான் இருந்துகொண்டிருக்கிறது. நான் சுற்றிச் சுற்றித்தான் பார்த்துக்கொண்டிருக்கிறேன். நான் அப்படிப் பார்க்கவில்லை என்ற குற்றச்சாட்டு சரியல்ல. அப்படியிருந்தால் என்னுடைய பார்வைக்கு இந்தக் கோடியிலிருக்கும் திரு. மார்ட்டின் அவர்களும் அந்தக் கோடியிலிருக்கும் திரு. ஆறுமுகம் அவர்களும் புலப்படமாட்டார்கள். நான் சுற்றிச் சுற்றித்தான் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

1. வினாக்கள்-விடைகள்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண் **297.**

(துணைக் கேள்வி இல்லை.)

கிளிஞ்சல் எடுக்கும் குத்தகை

*** 298 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னார்க்காடு மாவட்டம், மரக்காணம், கந்தாடு ஆகிய ஊர்களில் கிளிஞ்சல் எடுக்கும் குத்தகையை இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை என்